செய்தி வெளியீடு எண்.19 நாள்.08.01.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கான பொங்கல் தொகுப்பு பரிசு பொருட்கள் தயார் செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப.,அவர்கள் நேரில் பார்வையிட்டார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கான பொங்கல் தொகுப்பு பரிசு பொருட்கள் தயார் செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப.,அவர்கள் இன்று(08.01.2017) நேரில் பார்வையிட்டார்.

கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் உளுந்தை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பொங்கல் தொகுப்பு பரிசு பொருட்கள் தயார் செய்யும் பணிகளை நேரில் பார்வையிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது திருவள்ளூர் மாவட்டத்தில் முந்திரி 10.5 டன், உளர் திராட்சை 10.5 டன், ஏளக்காய் 2.5 டன் மாவட்டத்திற்கு பெறப்பட்டு அவற்றை குடும்ப அட்டைதாரர்களுக்கு பெக்கிங் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. 5,19,334 குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கபடவுள்ளது இத்துடன் குடும்ப அட்டை ஒன்றிற்கு 1கிலோ அரிசி மற்றும் சர்க்கரை வழங்கப்படும். இவற்றுடன் கரும்பு வழங்குவதற்கு 2.5 இலட்சம் கரும்பு வாங்கப்பட்டுள்ளது . இவை அனைத்தும் பொங்கல் தினத்திற்கு முன்பாக அனைத்து நியாய விலை கடைகள் மூலமாக பொது மக்களுக்கு வழங்கப்டும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.எஸ்.ஜெயச்சந்திரன், திருவள்ளூர் வட்டாட்சியர் திருமதி.கார்க்குழலி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~